**<u>முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு</u>**

**O.S.No.** 436/2019

2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 20 ம் தேதியன்று **PW.1** ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கவிவர்த்தினி | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் வாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக என் பிறப்பு சான்றிதழ் **வாசாஆ** 1. என் தாயாருக்கும் என் தந்தைக்கும் இடையே நடந்த திருமண அழைப்பிதழ் **வாசாஆ** 2. 21.4.1972 ம் தேதியில் என் தாத்தா சேமலைக்கவுண்டர் கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 3.** 10.5.1971 ம் தேதியில் என் தாத்தாவின் அடமானம் கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **வாசாஆ 4.** 7.7.1975 ம் தேதியில் என் தாத்தாவின் அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் **வாசாஆ 5.** 7.9.1994 ம் தேதியில் என் தாத்தாவிற்கும் மற்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை சான்றிட்ட நகல் **வாசாஆ** 6. 17.12.1982 ம் தேதியில் என் தாத்தா சேமலைக்கவுண்டர் அவர் மனைவி சென்னம்மாளை என் அப்பாவிற்கு கார்டியனாக கொண்டு ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரம் சான்றிட்ட நகல் **வாசாஆ** 7. 24.9.1990 ம் தேதியில் தட

பாத்தியம் சாமியப்பகவுண்டருக்கு என் தாத்தா எழுதி கொடுத்த பத்திரம் சான்றிட்ட நகல் **வாசாஆ** 8. அதே தேதியில் மற்றொருவருக்கு எழுதி கொடுத்த தட பாத்திய பத்திரம் எழுதி கொடுத்தற்கான சான்றிட்ட நகல் **வாசாஆ** 9. 22.5.2006 ம் தேதியில் என் அப்பா என் தாத்தாவிற்கு எழுதி கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ** 10. 15.9.2011 ம் தேதியில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கும் அவருடைய பெண் மக்களும் சேர்ந்து எழுதி கொண்ட கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வாசாஆ** 11 ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.